**வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் (என்ஆர்சீபி) ஆரம்ப நோக்கெல்லை மற்றும் மேலதிக நிதியளிப்பு -**

வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் (என்ஆர்சீபி) ஆரம்ப நோக்கெல்லை மற்றும் மேலதிக நிதியளிப்பின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய 2639 –எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் நிறைவேற்றல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபை தேசிய மட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை முகாமை செய்வதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் பொறுப்பாக உள்ளது. வடக்குப் பிராந்தியம் மற்றும் வடமத்திய மாகாணத்திலுள்ள 170 கிலோமீற்றர் வீதிகளைப் புனரமைப்பு செய்து அபிவிருத்தி செய்வதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்ட நிதி மதிப்பீட்டு ஆவணத்தின்படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 146 மில்லினானதுடன் அதில் ஐ.அ.டொலர் 130 மில்லியன் அல்லது 89 சதவீதம் ஆசிய அபிவிருத்திச் வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மேலும், இலங்கை அரசாங்கத்தின் 2010 அபிவிருத்தி மாதிரித்திட்ட வேலைத் திட்டத்தின் கீழ் வட மாகாணம் மற்றும் வடமத்திய மாகாணத்தில் 280 கிலோமீற்றர் வரையான தேசிய வீதிகளை புனரமைப்பதற்கு 2013 ஆகஸ்ட் 28 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இலங்கை அரசாங்கத்தால் ஐ.அ.டொலர் 30 மில்லியன் மற்றும் எஸ்டிஆர் 45,215,000 (அண்ணளவாக ஐ.அ.டொலர் 68 மில்லயன்)) மேலதிக நிதியளிப்பிற்கான முறையே கடன் இல. 2890 எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) மற்றும் 2891 எஸ்ஆர்ஐ இன் கீழான இரண்டு கடன் உடன்படிக்கைகள் கைசாத்திடப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 ஒக்தோபர் 22 இல் தொடங்கியிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. மேலதிக நிதியளிப்பு ஒழுங்குகளின் கீழான வேலைகள் 2013 ஆகஸ்ட் 28 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2015 பெப்ரவரி 25 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்குவதும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

### 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர்,

ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நொக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(உ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்தனவா எனபதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

--------------------

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தது என்றும்,

(இ) கடனின் கீழான பற்றுதல் கடன் உடன்படிக்கையின் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கட்டுநிதி நிதியக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(உ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஊ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

--------------------------

### 4.1 நிதிசார் செயலாற்றல்கள்

-----------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 4,483,868,313 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 12,719,480,889 ஆகும். மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செலவினம், முன்னைய

ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்று கீழே தரப்படுகின்றன.

| **செலவின விடயம்** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம்** | | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|
| | **2013 ரூபா** | **2012 ரூபா** | **2013 ரூபா** |
| அலுவலக உபகரணங்கள் | 447,800 | 334,007 | 1,137,665 |
| தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் | 1,113,942,317 | - | 1,113,942,317 |
| ஒப்பந்தக் கொடுப்பனவு | 3,095,364,158 | 7,172,837,255 | 10,788,606,116 |
| மேற்பார்வை ஆலோசனை | | | |
| - தேசிய நெடுஞ்சாலைகள் | 105,021,593 | 184,198,978 | 301,691,572 |
| - மாகாண வீதிகள் | 69,070,800 | 133,418,072 | 282,041,894 |
| அளவை/ பரிசோதனைக் கட்டணங்கள் | 1,413,186 | 300,000 | 2,766,562 |
| அதிகரிக்கும் செலவினம் | 38,329,921 | 34,412,665 | 97,623,710 |
| வட்டி/கடப்பாட்டுக் கட்டணங்கள் | 60,278,538 | 47,915,286 | 131,671,053 |
| | 4,483,868,313 | 7,573,416,263 | 12,719,480,889 |

## 4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதிக் நிதியக் கணக்கின் தொழிற்பாடுகள் மற்றும் அந்தக் கணக்கில் அத்திகதியில் உள்ளவாறான மீதி என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| | **கடன் இல. 2639** | | **கடன் இல. 2890** | |
|---|---|---|---|---|
| | **ஐ.அ.டொலர்** | **ரூபா** | **ஐ.அ.டொலர்** | **ரூபா** |
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 11,690.81 | 1,486,613 | 150,000.00 | 19,665,000 |
| கூட்டு :- மீள் நிரம்பல்கள் | 304,565.22 | 39,180,500 | - | - |
| | 316,256.03 | 40,667,113 | 150,000.00 | 19,665,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| +/- வெளிநாட்டு நாணய மாற்று இலாபம் | - | 211,078 | - | (35,887) |
| | --------------- | -------------- | ------------- | ---------- |
| | 316,256.03 | 40,878,191 | 150,000.00 | 19,629,113 |
| கழி :- பற்றுதல்கள் | (268,323.82) | (34,610,910) | (61,881.11) | (8,107,304) |
| | -------------- | ----------------- | --------------- | --------------- |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 47,932.21 | 6,267,281 | 8,118.89 | 11,521,809 |
| | -------------- | ----------------- | --------------- | --------------- |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடன் உடன்படிக்கைகள் இல. 2890 எஸ்ஆர்ஜ மற்றும் 2891 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) என்பவற்றின் கீழ் மேலதிக நிதியளிப்பு உடன்படிக்கைகளிற்காக புறம்பான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் உரிய உடன்படிக்கைகளின் கீழ் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் இணைக்கப்பட்டிருந்ததுடன் இந்தச் செயற்திட்டத்தின் கீழ் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 11,599,596,673 தொகையான சிவில் நடைபெறும் வேலை பொறியியலாளரால் சான்றுபடுத்தப்பட்ட உள்ளபடியான வேலைப் பெறுமதிக்குப் பதிலாக ஒப்பந்தகாரருக்காக செலுத்தப்பட்ட தொகைகள் மாத்திரம் பிரதிநிதித்துவப்படுதியிருந்தது.

(இ) நிதிக்கூற்றுக்களின் 2.4 ஆம் இலக்க குறிப்பின் படி, ஒப்பந்தகாலத்தின் போது ஒப்பந்தகாரர் மற்றும் ஆலோசனையாளரால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை செயற்திட்ட செலவினமாக கருதப்பட்டதுடன் ஆதனம், பொறி மற்றும் உபகரணமாக காட்டுவதற்குப் பதிலாக நடைமுறை வேலையின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது. ஆகவே, ரூபா 137,665 பெறுமதியான சொத்துக்கள் மாத்திரம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது பொறியியலாளரால் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 2,365,532 பெறுமதியான முரண் கட்டளையின் கீழ் செய்யப்பட்ட வேலைகள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(உ) பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.9 மற்றும் 8.6 ஆம் பிரிவுகளின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்திட்டத்திற்காக விடுவிக்கப்பட்ட ஊழியர்களிற்கு ரூபா 258,892 ஆன மிகையூதியம் மற்றும் மருத்துவப் படிகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவர்கள் அத்தகைய படிகளிற்காக தகுதியற்றிருந்தனர்.

(ஊ) 2013 திசெம்பர் 31 வரை செயற்திட்டத்தில் சேவையாற்றிய வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களிற்காக நிதிக் கூற்றுக்களில் ரூபா 409,746 தொகையான பணிக்கொடை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஏற்பாடு பதிலாக செயற்திட்டத்தில் சேவையாற்றிய காலத்திற்குப் பதிலாக கணிப்பிடுவதற்குப் பதிலாக

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முழுச் சேவைக்காலத்திற்காகவும் ஏற்பாடடின் கணிப்பீடு மேலதிகமாக காட்டப்பட்டிருந்தது.

(எ) செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களின் சம்பளங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2007 ஏப்ரல் 05 இன் 33 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் அறிமுகப்படுத்தப்பட்ட சூத்திரத்தில் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில், மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களை பின்பற்றாமல் 2013 திசெம்பர் 31 வரை சம்பளங்களாக ரூபா 19,928,802 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக மேந்தலைகள் மற்றும் பெறுமதி சேர் வரியாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 1,117,149 தொகை அனுப்பப்பட்டிருந்தது. வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டதிற்காக வரிக் கொடுப்பனவுகளில் விலக்கு வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஐ) ஒப்பந்த கொள்வனவு வழிகாட்டலின் 5.4.4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு ஏதாவது ஒப்பந்த வேலைகளிற்கான தொழிலாரம்பிப்பு முற்பணம் ஏற்பாட்டுத் தொகை மற்றும் நிகழத்தக்கவைகள் தவிர்த்த ஒப்பந்த தொகை செலுத்தப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களிற்கு முரணாக ஏற்பாட்டுத் தொகை மற்றும் நிகழத்தக்கவைகளுடன் ரூபா 1,659,000 தொழிலாரம்பிப்பு முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஒ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 84,766,089 செலுத்த வேண்டியவைகளிற்கான ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகவே, மீளாய்வாண்டிற்கான மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் அதேதொகையால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

## 6. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிகளின் பயன்பாடு

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, செயற்திட்டத்தின் நிதியளிப்பு மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதிகளின் பயன்பாடு தொடர்பான நில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2013 ஆண்டு மதிப்பீட்டில் பாதீட்டு ஏற்பாடு | 2013 ஆண்டின் போது பயன்படுத்திய தொகை | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் |
| கடன் இல 2639-SRI | 130 | 14,950 | 4,505 | 4,505 | 90.3 | 11,743 |
| கடன் இல 2890 SRI (SF) | 68 | 8,840 | 322 | 317 | 2.6 | 335 |
| கடன் 2891-SRI | 30 | 3,900 | - | 233 | 1.8 | 232 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இலங்கை அரசாங்கம் | 16 | 2,080 | 07 | 07 | 0.1 | 26 |
| | ------------- | ------------- | ------------- | ------------- | ------------- | ------------- |
| | 244 | 29,770 | 4,834 | 5,062 | 94.8 | 12,336 |
| | ------------- | ------------- | ------------- | ------------- | ------------- | ------------- |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட காலத்தின் 52 மாதங்களில் 40 மாதங்கள் அல்லது 76 சதவீதம் காலாவதியாகியிருந்தது. எவ்வாறாயினும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த ஒதுக்கீட்டில் 38 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் அனுமதித்த செயற்திட்ட காலத்தின் போது மொத்த ஒதுக்கீட்டின் பயன்பாடு ஐயத்திற்கிடமாக உள்ளதென குறிப்பிடப்பட்டிருந்தன.

**6.2. பௌதீக செயலாற்றல்**

---------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன் உடன்படிக்கையின் பிரகாரம், வட மாகாணம் மற்றும் வட மத்திய மாகாணத்தில் 170 கிலோமீற்றர் தேசிய வீதிகளைப் புனரமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. ஒப்பந்த பொதிகள் இரண்டு ஆண்டுகளின் பின்னர் முன்று ஆண்டுகளிற்காக வீதி புனரமைப்பு மற்றும் வீதியின் பராமரிப்பிற்காக இரண்டு கட்டங்களை கொண்டுள்ளது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடனின் மூல நோக்கெல்லையின் கீழ் 10 வீதிகளின் புனரமமப்பு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயலாற்றல் அடிப்படை வீதிப் பராமரிப்பு வேலைகள் செயலாற்றல் இன்மை காரணமாக கணக்காய்வில் நியாயமாக மதிப்பிட முடியவில்லை.

(ஆ) மேலதிக நிதியளிப்பு ஒழுங்குகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீதிப் புனரமைப்பு வேலைகளின் முன்னேற்றம் பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

| **ஒப்பந்தத்தின் பெயர்** | **ஒப்பந்த இலக்கம்** | **தொடங்கிய திகதி** | **எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதி** | **ஒப்பந்த பெறுமதி** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏறிப்ட்ட செலவினம்** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம்** |
|---|---|---|---|---|---|---|
| | | | | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **சதவீதம்** |
| A029- வவுனியா – கொரவப்பொத்தான வீதியின் புனரமைப்பு/ முன்னேற்றம் | CP-11 | 2013 ஆகஸ்ட் 24 | 2015 பெப்ரவரி 20 | 990.41 | 242.65 | 11.0 |
| B283- மதவாச்சி-கெபிதிகொல்லாவ – வீதியின் புனரமைப்பு/ முன்னேற்றம் | CP-12 | 2013 ஆகஸ்ட் 28 | 2015 பெப்ரவரி 25 | 725.65 | 127.64 | 5.0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| B283- மதவாச்சி-கெபிதிகொல்லாவ – வீதியின் புனரமைப்பு/ முன்னேற்றம் | CP-13 | 2013 ஆகஸ்ட் 28 | 2015 பெப்ரவரி 25 | 721.61 | 72.16 | 2.7 |
| B211-கெபிதிகொல்லாவ – பதவியாவ வீதியின் புனரமைப்பு/ முன்னேற்றம் | CP-14 | 2013 ஆகஸ்ட் 28 | 2015 பெப்ரவரி 25 | 885.27 | 103.38 | 2.2 |
| B211-கெவிதிகொல்லவ – பதவியாவ வீதியின் புனரமைப்பு/ முன்னேற்றம் | CP-15 | 2013 ஆகஸ்ட் 28 | 2015 பெப்ரவரி 25 | 1,020.29 | 102.03 | 3.5 |

**6.3 ஒப்பந்த நிர்வாகம்**

------------------------------

செயற்திட்டத்தின் மூல நோக்கெல்லையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு வேலைகள் தொடர்பான பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் (என்ஆர்சீபி) இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிதிகளைப் பயன்படுத்தி ஏ009- கண்டி- யாழ்ப்பாணம் வீதியின் கெக்கிராவ மற்றும் மரதன்னடவல நகரத்தில் அமைந்துள்ள தண்ணீர் குழாய்களை மீள பொருத்துவதற்கு UPVC மற்றும் DI குழாய்கள் ரூபா 36,054,386 வழங்குவதற்கும் விநியோகிப்பதற்கும் பொருத்துவதற்கும் கையேற்கப்பட்டிருந்ததுடன் குழாய் பொருத்துதல் வேலைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்பார்வை செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செயற்திட்டமானது ஒப்பந்தத்தை மீறாமல் தேசிய நீர் வழங்கல் மற்றும் சபையின் சார்பில் அத்தகைய வேலைகள் கையேற்கப்பட்டிருந்தது. மேலும், தம்புள்ள- தோனிகல வீதி (ச பீ ீ-01) மற்றும் தோனிகல- கல்கமுவ (சீபி-02) இன் புனரமைப்பிற்காக ஈடுபட்டுள்ள ஒப்பந்தகாரர் குழாய் பொருத்துதல் வேலைகளை நிறைவேற்றுவதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவர்களுடைய முரண் கட்டளைகளும் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) கெக்கிராவ நகரத்தில் 92 + 400 கிமீ முதல் 93 + 500 கீமீ வரையான பிரிவில் புனரமைப்பு வேலைகள் UPVC மற்றும் DI குழாய்கள் கொள்வனவு செய்த பின்னர் நீக்கப்பட்டிருந்தது.

(iii) ரூபா 4,781,562 பெறுமதியான குழாய்கள் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் அநுராதபுரத்தில் மாகாண பணிப்பாளர் அலுவலகத்தில் பயனற்றிருந்தது.

(ஆ) வேலைத்தள கூட்டக் குறிப்புகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மேலதிக நிதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த சீபி12, சீபி17, சீபி15, சீபி13 பொதிகளின் கீழ் புனரமைப்பு வேலைகளின் முன்னேற்றம் திறனுடைய மற்றும் திறனற்ற தொழிலாளர், பொருட்கள், பொறி மற்றும் உபகரணங்கள் போன்ற அத்தகைய ஒப்பந்தகாரரின் போதாத வளங்கள் காரணமாக பௌதீக முன்னேற்றம் எதிர்பார்த்த மட்டத்தை விட குறைவாக இருந்ததென அறிக்கையிடப்பட்டது.

எவ்வாறாயினும், பட்டியலிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம், வேலைகளின் பூர்த்தியாக்கலை உறுதிப்படுத்துவதற்கு ஒப்பந்தகாரராலோ அல்லது செயற்திட்டத்தாலோ உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், வழங்கப்பட்ட பாதுகாப்பு சமிக்ஞைகள் மற்றும் போக்குவரத்து நெரில் கட்டுப்பாட்டு ஒழுங்குகள் திருப்திகரமற்றிருந்தன என அவதானிக்கப்பட்டது. சீபி 13, 14, 15 ஆம் பொதிகளின் கீழான வேலைகள் 2013 ஆகஸ்ட் 38 இல் தொடங்கப்பட்டிருந்த போதிலும் திருத்தப்பட்ட வேலை நிகழ்ச்சித் திட்டம், முறைக் கூற்று மற்றும் தரக்கட்டுப்பாட்டுத் திட்டம் 2014 மார்ச் 01 வரையும் ஒப்பந்தக்காரரால் சமார்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6.3.1 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடுவர் தீர்ப்புக் குழுவொன்று நில பொருட்களை திரும்ப நிரப்புதல் மீதான தகராறை தீர்ப்பதற்கு தம்புள்ள – தோனிகல வீதியின் (சீபி-01) புனரமைப்பு வேலைகளில் ஏடுபட்டிருந்த ஒப்பந்தகாரர்களிற்கு ரூபா 1,063,163 தொகை செலுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய தகராறு ஆலோசனையாளரின் திருப்திகரமற்ற செயலாற்றல் காரணமாக எழுந்திருந்ததென மேலும் அவதானிக்கப்பட்டது. அவருடயை கடமைகளை ஆற்றத்தவறியமைக்காக ஆலோசனையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மானிப்பாய் முதல் கைதடி வரையான வீதியின் (சீபி- 05) புனரமைப்பிற்கான ஒப்பந்தம் ஒண்றுதிரட்டிய அடிப்படை கோஸ் மற்றும் வெயறிங் கோஸ் இடுவதற்கு வழங்கப்பட்டது. செயற்திட்ட பொறியியலாளர்கள் மற்றும் ஆலோசனையாளர்கள் உலர்ந்த மேற்பரப்பில் அடையாளக் கோடு பிரயோகத்தல் காரணமாக கொடுப்பனவை சான்றுபடுத்தியிருக்கவில்லை. எவ்வாறாயினும், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு மற்றும் வீதி அபிவிருத்திச் சபை பணிப்பாளர் நாயகம் முன்னங்கீகாரம் இல்லாமல் ஒப்பந்தகாரரால் செய்யப்பட்ட வேலையின் நோக்கெல்லையின் மாற்றத்தை கவனத்திற் கொள்ளாமல் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 4,170,320 ஆன கொடுப்பனவைச் செய்வதற்கு ஆலோசனையாளரின் ஒத்துழைப்புடன் அனுமதித்திருந்தது.

(இ) 0+000 கிமீ முதல் 27+400 கிமீ வரையான வல்லை முதல் அராலி வரையான வீதியின் (சீபி- 06) புனரமப்பிற்கான ஒப்பந்தம் 2011 மே மாதத்தில் வழங்கப்பட்டுடன் 4+140 கிமீ முதல் 9+200 கிமீ வரையான வீதிப் பிரிவின் புனரமைப்பு வேலைகள் பாதுகாப்பு காரணங்களால் பின்னர் நீக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தக்காரர் நீக்கப்பட்ட வீதி வேலைகளில் ஏற்பட்ட மேந்தலைச் செலவினங்கள் மற்றும் அவற்றின் மீதான ரூபா 45,489,420 தொகையான இலாபங்கள் கோரப்பட்டிருந்ததுடன் செயற்திட்டமானது அத்தொகையை செலுத்தியிருந்தது. பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சிலிருந்தான தெளிவுபடுத்தல் வீதி வேலைகளின் ஆரம்ப கட்டத்தில் பெறப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது. மேலும், பின்னர் நீக்கப்பட்டிருந்த வேலைகளில் ரூபா 2.22 மில்லியன் தொகையான தொழில் ஆரம்பிப்பு கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஈ) வல்லை முதல் அராலி வரையான வீதியின் (சீபி- 06) புனரமப்பிற்கான கேள்வி ஆவணங்களின் பிரகாரம், வீதிப் புனரமைப்புக்கான மண் தேவைகள் யாழ்ப்பாணத்தில் இனங்காணப்பட்ட குழிகளிலிருந்து பெறப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், ஒப்பந்தக்காரர் முன்னங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் கிளிநொச்சியிலிருந்து செயற்திட்டத்திற்காக முழு மண் தேவைகளையும் ஏற்றியிறக்கியிருந்தார். ரூபா 29,831,919 தொகையான போக்குவரத்துக் கிரயம் இது தொடர்பில் ஆலோசனையாளரின் ஒத்துழைப்பினைக் பெற்றுக்கொள்ளாமல் ஒப்பந்தக்காரருக்கு செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 0+000 கிமீ முதல் 27+400 கிமீ வரையான வல்லை முதல் அராலி வரையான வீதியின் புனரமைப்பு நிலைபேறாகப் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 10 முதல் 16.80 மீற்றர் வரையான நீளத்தில் பிரதான வெடிப்புகள் உள்ளடங்கலாக 9+220 கிமீ முதல் 15+820 கிமீ வரையான விளிம்புகளின் வீதி மேற்பரப்பில் வெடிப்புக்கள் காணப்பட்டது. சுற்றியுள்ள நிலப்பரப்பில் வீதி மேற்பரப்பு ஊடாக வெடிப்புக்கள் பரவியிரந்தது. 2013 யூலை மாதத்தில் வருகைதந்திருந்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் மீளாய்வுப் பணிகள் மற்றும் வெடிப்புக்களின் விரிவான கற்கைளிற்காக சுதந்திரமான நிபுணர்கள் ஈடுபடுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது வீதி மேற்பரப்பில் வெடிப்புக்களிற்கான காரணத்தை புலனாய்வு செய்வதற்கு சுதந்திரமான நிபுணர்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகள் இரண்டு களி மண் ஆய்வுகூடங்கள் மற்றும் களப் பரிசோதனைகள் குறித்திருந்தது. மேலும், தற்காலிக திருத்தம் வீதிகளின வீதித் தரங்களை உறுதிப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக செயற்திட்ட பணிப்பாளரின் சிபார்சில் ஒப்பந்தகாரரால் செய்யப்பட்டிருந்தது.

(ஊ) ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளின் 14.5 ஆம் உட்பிரிவால் வேண்டப்பட்டவாறு, வேலைத்தளத்தில் பொருட்கள் மீதான முற்பணம் ரூபா 1,367,437 தொகையான 80 சதவீதம் வேலைத்தளத்தில் பொருட்களின் தரத்தினை நிர்ணயிப்பதற்கும் பொருட் பட்டியலை மெய்மையாய்வு செய்வதன் மூலம் அதன் பெறுமதியை உறுதிப்படுத்துதல் போன்ற பௌதீக கேவை அளவீடகள் மேற்கொள்ளாமல் மாங்குளம் - முல்லைத்தீவு வீதியின் (சீபி- 08) புனரமைப்பில் ஈடுபட்ட ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது என பௌதீக பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

(எ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 4.3.1 ஆம் பிரிவின் பிரகாரம், தொலைபேசி வயர்களின் அகற்றல் மற்றும் மீள்பொருத்துலிற்காக அளவீட்டுப் பட்டியலிற்கு தொலைத்தொடர்பு வரி மற்றும் செஸ்வரி என்பவற்றிற்கு ஏற்பாடுகள் எதுவும் செய்யப்பட்டிருக்வில்லை. எவ்வாறாயினும், வல்லை - அராலி வீதி (சீபி- 6) மற்றும் தம்புள்ள – தங்காலை வீ (சீபி 1) என்பவற்றின் புனரமைப்பிற்கான ஒப்பந்தங்கள் தொடர்பில் இருக்கின்ற ரெலிக்கொம் வலையமைப்புக்களின் அகற்றல் மற்றும் மீள்பொருத்துதலின் வரிகளாக இலங்கை ரெலிக்கொம்மிற்கு ரூபா 1,245,325 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) ஒப்பந்தக்காரரால் பின்பற்றப்பட்டிருக்காத குறித்த தொழில்நுட்ப குறிப்புரைகள் காரணமாக மாங்குளம்- முல்லைத்தீவு வீதியின் (சீபி- 7 மற்றும் 9) புனரமைப்பின் போது குறைபாடுகள் றிக்கையிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தக்காரர் அத்தகைய குறைபாடுகளை திருத்தியிருந்தாரா என உறுதிப்டுத்துவதற்கு முறையான சான்றுகள் எதுவும் இருக்கவில்லை.

(ஐ) ஒப்பந்தக்காரர் கையேற்பு சான்றிதழை வழங்கிய திகதியிலிருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக வீதியை பேணுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. வீதியின் திருப்திகரமான பராமரிப்புகளில் கொடுப்பனவுகள் அடிப்படையாக இருக்க வேண்டும். செயலாற்றல் மாதாந்தம் மதிப்பிடப்பட வேண்டியதுடன் கொடுப்பனவுகள் செயலாற்றலின் பிரகாரம் முழுமையாக அல்லது பகுதியளிவில் செய்யப்பட்டுள்ளள. செயலாற்றல் குறிகாட்டிகள் பராமரிப்பு வேலைகளின் செயலாற்றலை மதிப்பிடுவதற்கு காரணமாயிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஒப்பந்தகாரர் கையேற்பு சான்றிதழை வழங்கிய பின்னர் நிலுவையாகவிருந்த வேைலைகளை மேற்கொள்வதற்கு அனுமதித்திருந்தனர் ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்ட பராமரிப்பு வேலைகளை இனங்காண்பது கடினமாக உள்ளது.

(ii) குறைபாடுகள் பொறுப்புக் காலத்தின் போது பராமரிப்பு வேலைகளின் போது புனரமைப்பு வேலைகளிற்காக கோருதல் தவிர்ப்பதற்கு செயலாற்றல் அடிப்படை வீதிப் பராமரிப்பிற்கான ஒப்பந்த உடன்படிக்கைகளில் உட்பிரிவொன்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.